**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**முன்னிலை : திருமதி.கா.பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07ஆம் நாள் திங்கள்கிழமை**

**அ.வ.எண்.258/2019**
**( TNDG07-001028-2019 )**

மகாலட்சுமி --- வாதி

எதிர்

1.கர்ணன் துரைச்சாமி (எ) கர்ணன்,
2.சரஸ்வதி
3.தங்கராஜ்கவுண்டர்,
4.நடராஜ்,
5.வெள்ளையம்மாள்,
6.கண்ணாத்தாள்,
7.கருப்புச்சாமி (எ) கருப்புத்துரை
8.கண்ணுச்சாமி,
9.செந்தில்குமார். --- பிரதிவாதிகள்

இந்த வழக்கானது கடந்த 21.06.2019ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையின்கீழ் இருந்து வந்த இந்த வழக்கில், என் முன்பாக வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P.முத்துச்செல்வன் மற்றும் S.ஸ்ரீராம் வசந்த் பிரசாத் ஆகியோர் ஆகியோர் முன்னிலையாகியும், 1-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் K.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், 2-ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S.பால்சாமி அவர்கள் முன்னிலையாகியும், 4 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S.எட்டீஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், 3, 6, 7 மற்றும் 9 பிரதிவாதிகள் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 5-ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையில், இறந்துபோன 5-ம் பிரதிவாதியின்

**வாரிசுதாரரான ரேவதி என்பவரை அசல் வழக்கில் 10-ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை நடத்த அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.7/2025 மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று அசல் வழக்கு பிராதை திருத்தம் செய்து, திருத்தல் பிராது தாக்கல் செய்வதற்காக வந்தபோது, பிற்பகல் 3.40 மணி வரை வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால், இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,**

**<u>தீர்ப்புரை</u>**

வழக்குச் சொத்துக்களில் வாதிக்குரிய பொதுவில் 1/3 பாகத்தை பிரதிவாதிகள் நயமிடர் பார்த்துப் பிரித்து வாதிக்கு தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலைத் தீர்ப்பாணை பிறப்பிக்கும்படி கோரியும், அவ்விதம் பிரதிவாதிகள் பாகம் பிரித்துக் கொடுக்கத் தவறும்பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் மூலம் தாவாச்சொத்துக்களை நயமிடர் பார்த்துப் பிரித்து வாதிக்குரிய 1/3 பாகத்தை தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி இறுதிநிலைத் தீர்ப்பாணை வழங்கும்படி கோரியும், அவ்விதம் வாதிக்கு ஒதுக்கும் பாகத்தை நீதிமன்றம் மூலம் பிரதிவாதிகளை விலக்கி வாதி தனித்த சுவாதீனம் பெற்றுக்கொள்ளும்படி உத்தரவிடும்படி கோரியும், 15.07.1992-ம் நாள் 1-ம் பிரதிவாதி, 3-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது (Null and void) என விளம்புகை செய்யும்படி கோரியும், 26.05.1995-ம் நாள் 1-ம் பிரதிவாதி, 4-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது (Null and void) என விளம்புகை செய்யும்படி கோரியும், 26.05.1995-ம் நாள் 5-ம் பிரதிவாதியின் மகனும், 6-ம் பிரதிவாதியின் கணவரும், 7-ம் பிரதிவாதியின் தகப்பனாருமான திரு.தங்கவேலுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது (Null and void) என விளம்புகை செய்யும்படி கோரியும், 07.08.2006-ம் நாள் வாதியின் தாயார் திருமதி.சுந்தரம்மாள் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது (Null and void) என விளம்புகை செய்யும்படி கோரியும், 13.07.2007-ம் நாள் 1-ம் பிரதிவாதி, 8-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி

இல்லாநிலையது (Null and void) என விளம்புகை செய்யும்படி கோரியும், 30.08.2018–ம் நாள் 1–ம் பிரதிவாதி, 9–ம் பிரதிவாதியுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் சட்டப்படி இல்லாநிலையது (Null and void) என விளம்புகை செய்யும்படி கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதிக்கு, பிரதிவாதிகளை செலுத்திவைக்க உத்தரவிடும்படி கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ.ம.எண்.2/2023–ல் கடந்த 19.10.2023–ம் தேதிய உத்தரவின்படி பிராது பரிகாரங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது)

இறந்துபோன 5–ம் பிரதிவாதியின் வாரிசுதாரரான ரேவதி என்பவரை அசல் வழக்கில் 10–ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கை நடத்த அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.7/2025 மனுவானது அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இன்று அசல் வழக்கு பிராதை திருத்தம் செய்து, திருத்தல் பிராது தாக்கல் செய்வதற்காக வந்தபோது, பிற்பகல் 3.40 மணி வரை வாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே, இவ்வழக்கானது வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை இன்று 07.04.2025ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.04.25 16:43:36 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.